நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No.372/2025

## P.W.1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | கலா |
| தந்தை / கணவர் பெயர் | : | மாரியப்பன் |
| கிராமம் | : | மேட்டுர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 48 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஆகஸ்ட் மாதம், 07–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.40 PM

1. நான் தற்போது அச்சங்காட்டில் குடியிருந்து மேட்டுர் காந்தி சிலை அருகில் ஷோபா கடை வைத்துள்ளேன். கடந்த வருடம் ஜீன் மாதம் இரவு 7.30 மணி சுமாருக்கு ATC டிப்போ அருகில் நான் ஷோபா ரிப்பேர் கடையில் எனது மெஷினில் உட்கார்ந்து தைத்துக்கொண்டிருந்தேன்.

2. ATC டிப்போ பக்கமிருந்து ஒரு இருச்சக்கர வாகனம் வேகமாக வந்து கடைக்குள் புகுந்து அமர்ந்திருந்த என்மீது மோதிவிட்டார். அந்த சமயத்தில் எனது கணவர் எனது கடைக்கு எதிர்ப்பக்கம் உள்ள டீக்கடைக்கு சென்றிருந்தார். மோதி எனக்கு கால், கை, இடுப்பு, நெற்றியின் கண்புருவத்திற்கு அருகில் உள்ள எலும்பு ஆகியவை உடைந்துவிட்டது. **(சாட்சி அழுதுக்கொண்டே பதிலளிக்கிறார். )**

3. அந்த இருச்சக்கர வாகனத்தை ஓட்டிவந்த நபரை என்னால் பார்க்கமுடியவில்லை. நான் மயங்கிவிட்டேன். எனது கணவர் ஓடிவந்து ஆம்புலன்சிற்கு சொல்லி மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக சொன்னார்கள். எனக்கு மேற்கண்டவாறு காயம் ஏற்பட்ட கவலையில் மாரடைப்பு ஏற்பட்டு இரண்டு மாதங்களுக்கு முன்பு இறந்துவிட்டார்.

4. மேட்டூர் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை எடுத்துக்கொண்டு சேலம் பிரீத்தம் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் என்னை அனுமதித்துள்ளார்கள். மறுநாள்தான் எனக்கு மயக்கம் தெளிந்தது. இந்த சம்பவம் தொடர்பாக எனது கணவர் புகார் கொடுத்துள்ளார்.

5. 31 நாட்கள் சேலம் பிரீத்தம் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். இருச்சக்கர வாகனத்தை ஓட்டிய நபரை அதன்பின்னிட்டு நான் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

6. மேற்படி விபத்துக்கு பின்னிட்டு மிகவும் கஷ்டப்பட்டு வாழ்ந்து வருகிறேன். எனது வாழ்க்கையே சிதைந்துவிட்டது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. 17 வருடங்களாக அந்த இடத்தில் ஷோபா ரிப்பேர் கடை வைத்துள்ளேன். அந்த இடம் நகராட்சிக்கு சொந்தமானது. வாடகை கொடுத்துதான் அந்த இடத்தில் கடை நடத்திவருகிறோம். அந்த கடைக்கு மின்இணைப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். அந்த இடம் இரவு நேரத்தில் இருட்டாகத்தான் இருக்கும் என்றால் சரியல்ல. அனைத்து கடைகளிலும் UPS வைத்து மின்விளக்கு எரியும்.

வீதிவிளக்கும் எரிந்துக்கொண்டிருக்கும்.

2. விபத்து நடந்த இடம் இருட்டான இடம் என்றாலும் நான் கடையில் இருந்து திடீரென வெளியே வரும்போது இந்த விபத்து எதிர்பாரா விதமாக நடந்துவிட்டது என்றாலும் சரியல்ல. விபத்துக்கான இழப்பீடு கேட்டு மனுதாக்கல் செய்துள்ளேன். அந்த மனு நிலுவையில் இருந்து வருகிறது.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 12.50 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்து படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No.372/2025

## P.W.2 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஆயிஷா |
| தந்தை / கணவர் பெயர் | : | அப்துல்மஜீத் |
| கிராமம் | : | மேட்டுர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW2 |
| வயது | : | 41 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2026–ஆம் வருடம், ஆகஸ்ட் மாதம், 07–ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.51 PM

1. நான் தற்போது இந்திரா நகரில்குடியிருந்து அ.சா.1 கலா என்பவர் கடை வைத்திருக்கும் பக்கத்துக்கடையில் பேன்சி கடை வைத்து நடத்தி வருகிறேன். சுமார் 1 வருடத்திற்கு முன்பு இரவு 7.30. மணிக்கு அ.சா.1 கலா அவர் தைக்கும் தையல் மிஷின் அருகே நின்றுக்கொண்டிருந்தார். அப்போது ஒருநபர்

இருச்சக்கர வாகனத்தில் ATC டிப்போ பக்கமிருந்து காந்தி சிலையை நோக்கி மின்னல்வேகத்தில் வந்து அ.சா.1 கலா மீது மோதிவிட்டார்.

2. இருட்டாக இருந்ததால் அந்த நபரை என்னால் சரியாக அடையாளம் பார்க்கமுடியவில்லை. ஆனால் அந்த நபர் சிறுவயது ஆண்நபராகும். சுமார் 25 வயதிற்குள் இருக்கலாம். மோதியதில் அ.சா.1 கலாவுக்கு கையும், காலும் உடைந்துவிட்டது. நெற்றியிலும் உடைந்து இரத்தம் வந்தது.

3. அந்த சமயத்தில் அ.சா.1 கலாவின் கணவர் கடைக்குள்தான் இருந்தார். அவருக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. ஆம்புலன்ஸ் வரவழைத்து மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துசென்றோம். மேட்டுர் அரசு மருத்துவமனையில் மேல்சிகிச்சைக்காக பரிந்துரை செய்ததன் அடிப்படையில் சேலம் போக சொல்லி அங்கு கொண்டு சென்றார்கள்.

4. மேற்படி விபத்து நடந்த சமயத்தில் எதிரில் துணிக்கடை வைத்திருந்த நாகலட்சுமி என்பவரும் உடனிருந்து அவரும் மருத்துவமனைக்கு வந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் வைத்திருக்கும் பேன்சி ஸ்டோர் தார்சாலையை ஒட்டிதான் உள்ளதென்றால் சரிதான். அது நகராட்சிக்கு சொந்தமானது என்றால் சரிதான். தற்போது வரை அந்த இடத்திற்கு மின்இணைப்பு கிடையாது என்றால் சரிதான். சம்பவம் நடந்தது இருட்டான நேரம் என்றால் சரிதான்.

2. சம்பவம் நடக்கும்போது நான் எனது கடையில்தான் இருந்தேன். எனது கடையை தாண்டித்தான் அ.சா.1 கலாவின் கடை உள்ளதென்றால் சரிதான். இருச்சக்கர வாகனம் எனது கடை வழியாகத்தான் சென்றது என்றாலும் சத்தம்கேட்டுதான் நான் பார்த்தேன் என்றாலும் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 1.00 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை**

செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்து படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.

ஒம்/—நா.கோபாலகிருஷ்ணன்
நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42—ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**CC. No.372/2025**

**P.W.3 —ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | நாகலட்சுமி |
| தந்தை / கணவர் பெயர் | : | வடிவேல் |
| கிராமம் | : | மேட்டூர் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW3 |
| வயது | : | 43 |

*1969—ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969—ஆம் வருடத்திய 44—வது மத்திய சட்டம் )—ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026—ஆம் வருடம், ஆகஸ்ட் மாதம், 07—ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:— 1.01 PM

1. நான் தற்போது கருப்பையா மூப்பனார் நகரில் குடியிருந்து அ.சா.1 கலா என்பவர் கடைக்கு எதிரில் துணிக்கடை வைத்துள்ளேன். சுமார் 1 வருடத்திற்கு முன்பாக அ.சா.1 கலா அவரது கடையில் நின்றுக்கொண்டிருந்தார். அப்போது இரவு 7—8.00 க்குள் இருக்கும். ஒரு இருச்சக்கர வாகனம் யமாக என்று நினைக்கிறேன்.

இருட்டில் சரியாக தெரியவில்லை. ATC டிப்போ பக்கமிருந்து வேமாக வந்து அ.சா.1 கலா என்பவரின் கடைக்குள் புகுந்து அவர்மீது மோதி கடைக்குள் விழுந்துவிட்டார்.

2. நான் அருகில் சென்று பார்க்கும்போது அ.சா.1 கலாவிற்கு கை, கால் அடிப்பட்டு தலையில் இரத்தம் வந்துக்கொண்டிருந்தது. அவரது கணவரும் அங்கு வந்துவிட்டார். கூட்டம் கூடிவிட்டது. ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு முதலுதவி சிகிச்சை அளித்தபின்னிட்டு சேலம் பிரீத்தம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

3. இருச்சக்கர வாகனத்தை ஓட்டிவந்த நபரை நான் சரியாக பார்க்கவில்லை. தற்போது பார்த்தால் எனக்கு சரியாக அடையாளம் தெரியாது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எங்களது கடைகளுக்கு மின்இணைப்பு இல்லை என்றால் சரிதான். சார்ஜர் லைட் போட்டுள்ளோம். கடை வைத்துள்ள இடம் நகராட்சிக்கு சொந்தம் என்றால்சரிதான். சம்பவம் நடந்தது இருட்டான நேரம் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 1.10 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்து படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**